REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

ஈடு இணையில்லா தொண்டு!

"கல்வி வசதிகளை அதிகரிப்பதில், தென் [illegible] காட்டும் பகுதி இந்தியாவில் வேறெங்கும் [illegible]; [illegible] கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து [illegible] பலசெய்து, குழந்தைகளைக் கல்விபெறச் செய்யும் [illegible] வர்க்கு ஈடானவர்களும் இந்தியாவில் இல்லை; [illegible] சர்க்கார்களின் முயற்சிகள் ஒப்பிடப்பட முடியாத [illegible] தனிப்பட்டவர்களே தென்னிந்தியாவில் கல்வி [illegible] அதிகக் கவனம் செலுத்தி வருகின்றனர்; [illegible] நல்லதுங்கூட!"

—என்று, டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் குறிப்பிட்டிருக்கிறார்.

மலர் 2] சென்னை: சித்திரை 10உ சனி (23—4—55) ★ ★ வெளியீடு: சித்திரை 11உ ஞாயிறு (24—4—55) [இதழ் 267

ரூர்கேலா புது நகராக மாறுகிறது!

இரும்புத்தொழிற்சாலையின் உடனடி பலன்

உருக்கு உற்பத்தியை இரட்டிப்பாக்க ஏற்பாடு

உற்பத்தி அமைச்சர் தரும் விளக்கம்

புதுடில்லி, ஏப். 22—

இந்தியப் பேரரசும், ஜெர்மன் கம்பெனியும் கூட்டாகச் சேர்ந்து, ஒரிசாவில் உள்ள ரூர்கேலாவில் ஒரு உருக்கு இரும்புத் தொழிற்சாலையை நிறுவ உடன்படிக்கை செய்துகொண்டுள்ளன.

அவ்வுடன்படிக்கையின்படி, தொழிற்சாலை இயங்கத் துவங்கியதும், 5 லட்சம் டன் இரும்புக் கட்டிகளை உற்பத்தி செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது; இப்பொழுது அது இரட்டிப்பாக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்சாலையை நிர்மாணிக்கும் இடத்தைப் பற்றிய முழு விவரமும் அறியும் ஆரம்ப வேலை முடிந்துவிட்டது அல்லது முடியுந் தருவாயில் இருக்கிறது எனவும், அங்கு தொழிற்சாலையை ஒட்டி உருவாக்கப்பட இருக்கும் புதிய நகர் பற்றிய முழுத் தகவலும் ஆராயப்பட்டுவிட்டது எனவும், அப்புதிய நகருக்கான உத்தேச செலவுத் தொகையும், நகர படமும் சிவில் எஞ்சினீயரால் தரப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது எனவும், இந்தியப் பேரரசின் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி அறிவித்துள்ளார்.

நிபுணர்களின் சிபாரிசுகளுக்கொப்ப, நகரமும் தொழிற்சாலையும் நிர்மாணிக்கப்பட இருக்கும் இடத்தில் இருந்துவரும் பல கிராமங்களையும், நிலப் பரப்பையும் வாங்கிக் கொள்ளுமாறு ஒரிசா அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையையும் மேற்படி மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

இடங்களை வாங்கிக்கொள்வதால் வேலையிழப்பவர்களுக்கு வேலை தரும் நோக்குடனும், அதற்கான பயிற்சி தரும் கருத்துடனும், வேலையிழப்பவர்களின் தொகை, அபிவிருத்தி அதிகாரியால் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதுவுமன்றி, அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்கு முன்பாக உள்ள இடைக்காலத்தில், அவர்களுக்குக் குடியிருக்க வசதியான ஒரு இடத்தையும் ஒரிசா அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

தொழிற்சாலையில் பணிபுரிவதற்கான 34 இஞ்சினீயர்கள், பயிற்சி பெறுவதற்காக ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும், மேலும் பலரை பல துறைகளில் பயிற்சி பெற, பயிற்சிக்கூடம் ஒன்று, 1956 ஜனவரி முதல் தேதி முதல் துவங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது எனவும், மேற்படி அமைச்சர் அறிவித்துள்ளார்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 1954 டிசம்பர் மாதம் வரை 3,96,000 ஏகர் நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டது.

ஊசிக் காதுக்குள் ஒட்டகம் நுழையுமா?

கட்டாய இந்திக்கு இராசகோபாலாச்சாரியார் எதிர்ப்பு

—அன்பளிப்பு: 'சுதேசமித்திரன்'

காவியுடையில் காமுகன்!

கன்னியைக் கடத்தினதற்கு இரண்டரை ஆண்டு தண்டனை!

புதுடில்லி, ஏப். 22—

சுவாமி சிவசாயித்தியனந்தன் என்பவன் காவியுடை காமுகன்! ஒரு இளம் பெண்ணைக் கடத்திச் சென்று பலாத்காரம் செய்ததாக, அவன் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது.

இரண்டு குற்றங்களையும் செய்திருக்கிறான் எனக் கண்டு, டெல்லி மாஜிஸ்திரேட் ஒருவர், மேற்படி காவியுடை காமுகனுக்கு நான்கு ஆண்டு கடின காவல் தண்டனை விதித்தார்.

தண்டனையை எதிர்த்து காமுகன், அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜிடம் நீதி கோரினான்.

காமுகனின் வழக்கை மறு விசாரணை செய்யுமாறு நீதிபதி உத்திரவிட்டார்.

வழக்கை விசாரித்த வேறு ஒரு மாஜிஸ்திரேட், கன்னிப் பெண்ணைக் கடத்தினதாக மட்டும் காமுகன் மீது குற்றஞ்சாட்டி, 2½ ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்தார்.

'சமதர்மத்தை உருவாக்க ம.சோ. கட்சியால் முடியாது'

மத்தியப் பிரதேச ம. சோ. கட்சி உறுப்பினர் சிலரின் கண்டுபிடிப்பு!

நாகபுரி, ஏப். 22—

"கடந்த இரண்டாண்டுகளாக கட்சிக்குள்ளாகவே [illegible] மலிந்துவிட்டன; இந்த நிலையில், கட்சி, சமதர்மத்தை [illegible] நாட்டுவதில் வெற்றி பெறும் என்று எனக்குத் [illegible]; எனவே, கட்சியிலிருந்து விலகிக்கொள்கிறேன்,"

என்று மத்திய பிரதேசத்திலிருந்து மக்கள் சபைக்கு வந்துள்ள உறுப்பினரான மகன்லால் பக்தி ம. சோ. கட்சியிலிருந்து விலகிவிட்டபோது குறிப்பிட்டிருக்கிறார்.

அவருடன் [illegible] சரும் ம. சோ. கட்சியிலிருந்து விலகிவிட்டனர் என்று தெரிய வருகிறது.

பக்தி என்ற அந்த உறுப்பினர், அண்மையில் நடைபெற்ற [illegible] தேர்தல் ஒன்றில், ம. சோ. கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவராகும்.

ஆப்கனிஸ்தானத்திலுள்ள பாகிஸ்தான் பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்புடன் பாகிஸ்தானுக்கும் [illegible] வர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிர்வாண சாதுவின் சண்டித்தனம்

ஒரு மாத சிறைத் தண்டனை தரப்பட்டது!

கோலாப்பூர், ஏப். 22—

ஷாபூரியிலிருக்கும் ஒரு ஜெயின கோயிலில், ஆச்சாரியா ஜம்பு சாகர் என்ற ஜெயின சாது, நிர்வாணமாக இருந்துவந்தார். ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாண கோலத்தைக் கைவிட்டு விடுமாறு சாதுவை வேண்டிக் கொண்டனர்.

பக்தர்களின் கோரிக்கைக்கு சாது இணங்க மறுத்து, 'நிர்வாண கோலத்திலேயே இருப்பேன்,' எனச் சண்டித்தனம் செய்துவந்தார். அதனால் கோயிலுக்கு வரும் பக்தர்களின் தொகை குறைய ஆரம்பித்தது.

வேறு வழி இல்லாததால், கோயில் தர்மகர்த்தாக்கள், சோலாப்பூர் சிவில் ஜட்ஜ் கோர்ட்டில் சாதுவுக்கு எதிராக வழக்குத் தொடுத்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி, கோயிலை விட்டு வெளியேறி விடும்படி சாதுவிற்குக் கட்டளையிட்டார்; கட்டளைக்குப் பணிந்து வெளியேற சாது மறுத்துவிட்டார்.

கோர்ட்டை அவமதித்ததாக சாதுமீது குற்றஞ் சாட்டி, மேற்படி நீதிபதி, சாதுவுக்கு ஒரு மாதம் வெறுங் தண்டனை விதித்தார்.

சாதுவிற்கு [illegible] குடைய [illegible] டனே காலம் வரை [illegible] நீதிபதி [illegible] தனும், சாதுவோ [illegible] தொழுகை [illegible]

★★★★★★ ★★★★★★★★★★★

பொதுக்குழுக் கூட்டத் தனி இதழ்

★

24—4—55 மாலை, தி.மு. கழகப் பொதுக் குழுக் கூட்ட நிகழ்ச்சிகளைத் தாங்கி, அரையணா விலையில் 'நம் நாடு' தனி இதழாக வெளிவரும்.

(ஆ-ர்.)

வங்காளி எதிர்ப்புக் கிளர்ச்சியின் விளைவு

உயர்தர அதிகாரிகள் மாற்றப்படுகின்றனர்

ஷில்லாங், ஏப். 22—

அசாம் கோல்பாரா மாவட்டத்தில் வங்காளிகளுக்கு எதிராக, பலாத்கார ஆர்ப்பாட்டங்கள் சென்ற பதினைந்து தினங்களுக்குமுன் நடைபெற்றன. அதன் விளைவாக, பல உயர்தர அதிகாரிகளை வேறு இடங்களுக்கு மாற்றிவிடுவது என அசாம் அரசாங்கம் முடிவு கட்டி இருக்கிறது.

கோல்பாரா மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்டாக இருப்பவருக்கு பதிலாக பி. எம். மேனன் என்பவர் நியமிக்கப்படுகிறார்.

போலீஸ் டெபுடி கமிஷனர் சர்மாவும் வேறு மாவட்டத்திற்கு அனுப்பப்படுகிறார்.

அடுத்த மாத துவக்கத்தில் மாநில திருத்தக்குழு அசாம் செல்ல இருக்கிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 23-4-'55 சனி

மூக்காடிட்டு அழுதால் மட்டும் போதாது!

"ஒரு குறிப்பிட்ட பாஷையைப் பேசுகிறவர்கள் தங்கள் பாஷையைக் கற்க வேண்டும் என்று மற்றொரு சமூகத்தாரை பலாத்காரம் செய்வது அன்பு முறைக்கு மாறுபட்ட செயலாகும்."

"அது வெற்றி பெருது."

"ஒரு குறிப்பிட்ட புது பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது வெறுப்பிலும் துவேஷத்திலும் முடியும்."

"பாஷைப் பிரச்சினையில் ஒற்றுமையும் வெற்றியும் அடைய வேண்டுமானுல் அன்பு வழியே சரியான மார்க்கமாகும்."

"இப்போது பெரிய உத்தியோகங்களுக்கு, அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த ஸ்தானங்களுக்கு, அன்னிய பாஷையில்—தமிழருக்கு அன்னியமான ஒரு பாஷையில்—தான் எல்லா பரீட்சையும் செய்வோம்; அதில் தேறியவர்களைத்தான் ஸ்தானங்களுக்கு எடுப்போம் என்று சொன்னுல் யாருக்குத்தான் கோபம் வராது."

"எனக்குமே கோபந்தான்."

"சந்தேகம் எதுபற்றியென்ருல், இன்னும் பால் குடிக்கும் பருவம் தீராத இந்தி பாஷையாகியக் குழந்தையைப் பற்றித்தான். இந்தி பாஷையானது தற்போது பலவீனமான நிலையில் இருக்கிறது.

"ஆங்கிலத்துக்குச் சமம் இல்லை என்பதில் வியப்பில்லை."

"தமிழுக்கும் சமம் இல்லை."

"வங்காளி பாஷைக்கும் சமம் இல்லை."

"இந்தி பாஷையை மிரட்டி அதைக் கொஞ்சம் மேலே தூக்கவேண்டும்."

"எல்லா விஷயங்களிலும் இந்தி பாஷை மூலமே பரீட்சை செய்யும் அந்தஸ்துக்கு இன்னும் இந்தி வரவில்லை."

"தமிழ் மக்களைப் பள்ளிக்கூடம் போகச் சொல்வதைப் பார்க்கிலும், இந்தி மொழியைப் பள்ளிக்கூடம் போகச் சொல்வது முதற்கடமை."

"பரீட்சையில் தேறவேண்டியது தமிழ்க் குழந்தைகள் அல்ல; இந்தி பாஷையானது பரீட்சையில் முதலில் தேறியாக வேண்டும்."

"உத்திர பிரதேசத்தில் இருக்கும் மக்களிடம் போய் 'தமிழ் மிக நல்ல பாஷை; ஆரிய நாட்டின் பண்பாடு நிறைந்துள்ள பழைய பாஷை; இதை நீங்கள் படித்துத் தேர்ந்தால்தான் உங்களுக்கு உத்தியோகம்' என்று சொன்னுல் அவர்களுக்கு எப்படி இருக்கும்? உள்ளம் பதைக்கும் அல்லவா?"

"இந்தி பேசுவோர்களுக்கிடையிலேயே இந்தவிதமான இந்தி, அந்தவிதமான இந்தி, என்ற பிளவுகள் உடனே தோன்ற ஆரம்பிக்கும்."

"காசி இந்தி ஒருவிதமாக இருக்கும்."

"அலகாபாத் இந்தி இன்னொரு விதமாக இருக்கும்."

"தில்லி இந்தி மூன்ருவது விதமாக இருக்கும்."

"இவற்றிற்குள் தீராத போட்டி உண்டாகும்."

"மிகப்பிற்போக்கான தென் ஆப்பிரிக்க அரசாட்சியிலும்கூட, ஆங்கில பாஷையைப் புறக்கணித்துவிட்டு டச்சுக் கலப்பான போயர் பாஷையையே அவர்கள் வற்புறுத்தவில்லை."

"அதைவிடவா நம்முடைய ஏக பாஷைப் பித்தர்களின் அவசரப் பைத்தியம் முற்ற வேண்டும்!"

"ஜனநாயகம் என்ருல் கொடுமையல்ல; அட்டகாசம்அல்ல. நியாயமும் விசால உணர்ச்சியும் சேர்ந்து இலங்க வேண்டிய ஒரு தத்துவம். தனி ஒரு மனிதனும் சந்தோஷம் அடைய வேண்டிய அமைப்பு, குடியரசு."

அன்பு, ஜனநாயகப் பண்பு மொழிப் பற்று ஆகிய அனைத்தையும் ஒருங்கே கூட்டி, மிக மிகத் தெளிவாகவும் உறுதியுடனும் கூறி இருப்பது, அன்பர் இராஜகோபாலாச்சாரியார்தான் என்பதை அறியவரும் எவரும், நம்மைப் போன்றே அதிர்ச்சியடைவர் என்பதில் வியப்பொன்றுமில்லை.

உத்திர பிரதேச இந்தி வெறியர்களின் பிற மொழியினர்மீது இந்தியைத் திணிக்க எடுத்துக் கொள்ளும் கட்டாய ஏற்பாட்டை, பலாத்காரம் எனக் கூறிடும் ஆச்சாரியார், ஒரு காலத்தில் அதே பலாத்காரத்தை, அன்புக்கு மாறுன அக்கிரமத்தை, ஜனநாயகப் பண்புக்குப் புறம்பான எதேச்சாதிகாரத்தை இந்தி திணிப்புக்கு மேற்கொண்டு, இடர்ப்பட்டார்; இறுதியில் மூக்குடைபட்டார்.

தாளமுத்து — நடராசனைப் பிணமாக்கினர்; பச்சிளங் குழந்தைகளுடன் தாய்மார்களை சிறையில் தள்ளிப் பூட்டினர்; ஆயிரக் கணக்கான இளைஞர்களை இருட்டறையில் மூடி வாட்டி வதைத்தார். தடியடி தந்து தமிழ் காக்கப் புறப்பட்டக் காளைகளின் மண்டைகளைப் பிளந்தார்.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் தாம் பெற்ற அனுபவத்தின் காரணமாகவோ என்னவோ, இன்று அறிவுரை கூறக் கிளம்பி இருக்கிருர் உத்திர பிரதேச இந்தி வெறியர்களுக்கு, அன்பர் ஆச்சாரியார்.

கட்டாயத்தால் துவேஷம் வளருமென்கிருர்; வற்புறுத்தலால் பகை பெருகும் என்கிருர்!

இந்தி 'லம்பாடி' மொழியென்ருேம் நாம் அன்று; தமிழுடன் ஒப்பவைத்து எண்ணத்தகாத வளமற்ற மொழி இந்தி என்ருேம் நாம் அன்று. அதனை ஆச்சாரியார், அன்று முழுமூச்சாக மறுத்தார்! இன்று அவர், தம் வாயாலேயே இந்தியின் சீரற்றத் தன்மையை எடுத்துக் காட்டுகிருர்—இல்லை—வளனம் செய்கிருர்!

அன்று, 'கட்டாய இந்தியால் தமிழ் கெடும்; தமிழ் வளமை அழியும்; இந்தியைத் திணிக்காதீர்' எனக் கேட்டுக் கொண்டதற்கு, 'இதோ! சிறைச்சாலை! உங்களுக்கென நிர்மாணிக்கப்பட்ட அறச்சாலை! உள்ளே கிடவுங்கள்!' என தமிழ் காத்த அறப்போர் வீரர்களை அடித்து அதற்குள் மூடி மகிழ்ந்தார் ஆச்சாரியார். அதே ஆச்சாரியார் இன்று, இந்தித் திணிப்பால் வரவிருக்கும் கேடுகளை சுட்டிக் காட்டுகிருர்!

தமிழை இட்லிக்கும், கட்டாய இந்தியை சட்னிக்கும் உவமை காட்டி இந்திக்கு ஆதரவு தேடினர், அன்று, ஆச்சாரியார். இட்லி வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்பட்டு, வெறும் சட்னியே கொடுக்க உத்திரப் பிரதேச இந்தி வெறியர்கள் உறுதி கொண்டிருப்பதைக் கண்டதும், சட்னியின் காரம் தாங்காது, ஆச்சாரியார் கதறுகிருர்—'சட்னி வேண்டாம்—வேண்டவே வேண்டாம்—இட்லியே இருக்கட்டும்—அதுவே போதும்' என முழக்கமிடுகிருர் — இல்லை — முகாரி பாடுகிருர்!

பலவித பூச்செடிகளை வைத்துப் பயிரிடும் பூங்காவில், விவரம் அறியா குழந்தை ஒன்று, கஞ்சா செடி ஒன்றையும் பூச்செடி என நம்பி பயிரிட முன் வந்தது. செடியின் இயல் பறிந்தோர் கூறினர், குழந்தை வைத்துப் பயிராக்கும் செடி கஞ்சாசெடி என்று. குழந்தை மீது இருந்த பாசத்தால், மற்றவர் கூறிய உண்மை, போதிய அளவு அக்காலத்தில் ஒப்புக் கொள்ளப்படாமல் போய்விட்டது. ஆனுல் முடிவில், கஞ்சா செடி பூக்க ஆரம்பித்ததும், அதன் மணம் போலீசுக்கு அழைப்பு விடுத்தது. சட்டத்தை மீறி கஞ்சா செடி பயிரிட்ட குற்றத்திற்காக, குழந்தையின் குடும்பமே தண்டனைக்குள்ளாயிற்று.

ஆச்சாரியார் கட்டாய இந்திக்கு அந்த நாளில் காட்டிய ஆர்வம் எதிர்ப்பாளர்களின் அறிவுரையைக் கேட்க மறுத்தது, அவரே, உத்திர பிரதேசத்தார் இந்தி விஷயத்தில் காட்டும் போக்கை கண்டித்துத் தீரவேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறது.

தென்னுப்பிரிக்கா போயர்களிலும் இழிகுணம் கொண்டிருப்பவர்கள் உத்திரப் பிரதேச இந்தி வெறியர்கள் எனப் பேசும் அளவிற்கு, உத்திர பிரதேசத்தார் இந்தி மொழி வெறி, ஆச்சாரியாருக்கு எரிச்சலைக் கொடுத்து இருக்கிறது.

எனவே, அறிக்கை விடுகிருர்! கட்டாய இந்தி ஆகாது என அறிவுரை கூறுகிருர், அன்பர் ஆச்சாரியார்!

'அணு குண்டைத் தடுத்திடுக' எனச் சில பல நாட்களாக உலக வல்லரசுகளை உருக்கமாகக் கேட்டுக் கொள்ளும் பணியில் ஈடுபட்டு இருக்கும் ஆச்சாரியார், இந்தி வெறியர்களுக்கு இதோபதேசம் செய்யக் கிளம்பி இருப்பது வரவேற்கத் தக்கதேயாகும். அணுகுண்டுத் தடை பிரசாரத்தை ஆச்சாரியார் தாராளமாக இனியும் செய்து வரட்டும். நாம் அதை வேண்டாம் எனச் சொல்ல வரவில்லை.

கட்டாய இந்தியை எதிர்த்து கட்டுரை தீட்டுவதோடு நின்றுவிடாமல், ஆச்சாரியார் வெளிக் கிளம்பவேண்டும்.

பட்டிதொட்டிகள் அனைத்திலும் சென்று, கட்டாய இந்திக்கு எதிராகப் படை திரட்ட வேண்டும். வெற்றி கிட்டும் வரை போரிட, ஆச்சாரியார் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். இதை விடுத்து, மூக்காடிட்டு அழுதால் மட்டும் போதாது—கட்டாய இந்தி சாகாது என்பதே நமது கருத்து.

தமிழ் நாட்டின் துரதிருஷ்டமோ என்னவோ, அதிகாரத்தைவிட்டு நீங்கிய பின்னர்தான், இத்தகு நற்செயலைச் செய்ய ஆச்சாரியார் போன்ருேர் முன் வருவது வழக்கமாக இருக்கிறது. அதிகாரத்தில் இருக்கும் பொழுதெல்லாம் இதற்கு நேர்மாருன காரியத்தைச் செய்வதையே பெருந்தொழிலாகக் கொண்டிருப்பதும், பதவி தொலைந்ததும் புதிய ஞானம் பெற்று, முன்னுள் தாம் செய்ததால் ஏற்பட்ட விளைவுகளைக் களைய முற்படுவதும் வழக்கமாகிவிட்டது. எது எப்படி இருந்தாலும், கட்டாய இந்தியை எதிர்த்து ஆச்சாரியார் தீவிரமாகப் பிரசாரம் செய்யவேண்டும் என்பதே நமது பேரவா.

செயற்கை மழை பெய்விக்கத் திட்டம்

சென்னை, ஏப். 21—

மாநிலத்தின் பல பகுதிகளிலும்—குறிப்பாக வரண்ட பகுதிகளில், செயற்கை மழை பெய்விக்கும் திட்டமொன்றை ரூ 20,000 செலவில் மேற்கொள்ளுவது பற்றி சர்க்கார் பரிசீலித்து வருவதாகத் தெரிய வருகிறது.

இதற்கான திட்டமொன்றை விவசாய இலாகா அதிகாரியும், சேதுராமன் என்ற மின்சார இலாகா உதவி எஞ்ஜினீயரும் மாநிலத்தின் சில இடங்களில் பரிசோதனைகள் நடத்திய பிறகு சர்க்காரிடம் தாக்கல் செய்தனர்.

வேலூரில் உள்ள வரண்ட பகுதிகள், மற்றும் சில இடங்களில் இந்தத் திட்டம் பரிசோதித்துப் பார்க்கப்படும் என்று தெரிகிறது

மதுவிலக்குக் கைதிகளுக்குவிடுதலை?

"மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் சிறை சென்ற கைதிகளை, நிபந்தனையின் மீது விடுதலை செய்வது பற்றி, சர்க்கார், தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது; இதனுல், நான்கில் ஒரு பங்காக, சிறையிலுள்ளவர்களின் எண்ணிக்கை குறையும்,"

என்று, சிறை இன்ஸ்பெக்டர்—ஜெனரல் டி. எஸ். இராமச்சந்திரன், மாநில சிறை சூப்பரின்டெண்டுகள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

'சந்தேகக் கண்' வேண்டாம்

தோழியர் மேரி கிளப்வாலா தலைமையில், சென்னை—தேனும் பேட்டையில் நடைபெற்ற இம் மாநாட்டில், மாநில சர்க்காரின் பிரதம காரியதரிசி ராமுண்ணி மேனன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சிறை சென்று மீள்பவர்களை, மக்கள் 'சந்தேகக் கண்' கொண்டு காண்கின்றனர்; அநாவசியமான இந்தப் பீதி மனப்பான்மை நீங்க வேண்டும்; துர்ப்பாக்கியசாலிகளான அவர்களை சமூகத்தின் அமைதியான, தன்னம்பிக்கையுள்ள மனிதப் பிறவிகளாக வாழ்க்கையில் குடிபுகச் செய்ய, மக்கள், உறுதிகொள்ள வேண்டும்."

பக்தர்களின் பெரு மதி!

தீயை அணைக்க சிவபெருமானை எதிர் பார்த்தனர்!

நாதியா மாவட்டத்தில், கோவில் அருகே எழுப்பப்பட்டிருந்த பந்தல் ஒன்றில் தீப்பிடித்துக் கொண்ட போது, அந்தத் தீயை கோவிலில் குடிகொண்டிருந்த சிவபெருமான் எழுந்துவந்து அணைப்பார் என்று எதிர்பார்த்து, கூடியிருந்த பக்தர்கள் ஏமாற்றமுற்றனராம்.

'சைத்ர சங்கராந்தி' என்ற வங்காள ஆண்டின் கடைசி நாள் கொண்டாட்டத்தின்போது பக்தர்கள் எல்லாரும் வழக்கமான ஒரு நாட்டியத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தனராம்.

வாயிலும் கையிலுமாக தீப்பந்தங்களை வைத்துக்கொண்டு ஒருவன் நடனமாடிக் கொண்டிருந்தானும்; அதிலிருந்து ஒரு தீப்பொறி கோவிலருகே அமையப் பெற்றிருந்த ஓலைப் பந்தலில் விழுந்து, பந்தல் தீப்பிடித்துக் கொண்டதாம்.

கூடியிருந்த பக்தர்களில் சிலர் தீயை உடனே அணைக்க வேண்டும் என்றனராம்; ஆனுல் ஆண்டவனிடம் அபார நம்பிக்கையும், மதத்தில் ஆழ்ந்த பற்றும் கொண்ட பக்தர்கள், 'கொழுந்துவிட்டெரியும் தீயை அணைக்க கோவில் கொண்டுள்ள சிவபெருமானே வருவார்; தீயை அணைக்கும் பொறுப்பு அவரைச் சேர்ந்தது,' என்று கூறினராம்!

தீப்பிடித்தவுடன், அதை அணைக்க முயற்சி செய்யாமலிருந்ததால், தீ, பந்தல் முழுவதையும் எரித்துச் சாம்பலாக்கிவிட்டதாம். பந்தலின்கீழ் கூடியிருந்த பக்தசிகாமணிகளும், 'தாங்கள் எங்கே நெருப்பில் வெந்துவிடுவோமோ,' என்ற அச்சத்தால் ஓடி மறைந்தனராம்!

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இலவசக் கல்வி

மத்திய பிரதேச சர்க்கார், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் எல்லாத் தரத்திலும் இலவசமாகவே கல்வி தர முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் உள்ள அனுதைக் குழந்தைகளுக்கு 'மெட்ரிகுலேஷன்' வரையில், இலவசமாகக் கல்வி தரவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இதனுல் அரசாங்கத்திற்கு சுமார் 5.16 லட்சம் ரூபாய் செலவாகுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

ஆதிக்கம் செலுத்திய காலம்

சென்றுவிட்டது!

கேப்டவுன், ஏப். 20—

"கறுப்பர் மீது வெள்ளையர் ஆதிக்கம் செலுத்தி, அவர்களை விரட்டின காலமெல்லாம் மலையேறிவிட்டது; நமது காலத்தில் நடைபெறும் மாபெரும் நிகழ்ச்சி ரஷ்யப் புரட்சி இயக்கமல்ல; அது கீழ்த்திசையிலிருந்து வெள்ளை ஏகாதிபத்தியம், தனது மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சியேயாகும்; இந்தியா, சீனு, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் எதிர்கால வல்லரசு நாடுகளாகக் கூடியவையாகும். இனிமேல் வெள்ளையர் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் கிழக்கத்திய நாடுகளுடன் தகராறுகளில் ஈடுபட மேலை நாடுகள் எதுவுமே தயாராக இருக்காது,"

இவ்வாறு தென் ஆப்பிரிக்க சட்டசபையில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசியிருக்கிருர்.

'மேற்கு அரசுகளின் பண உதவியை மறுக்காதீர்'

ஆப்பிரிக்க - ஆசிய நாடுகளுக்கு இந்தியாவின் ஆலோசனை

பாண்டுங், ஏப். 21—

ஆப்பிரிக்கா—ஆசிய நாடுகள், மேற்கு அரசுகளின் பண உதவியை மறுக்கும் அளவிற்குத் தங்களுடைய தேசிய மனப் போக்கைத் தீவிரப்படுத்திக் கொள்ளக்கூடாது-

இந்த ஆலோசனையை, பாண்டுங் மாநாட்டில் பங்கு கொண்டுள்ள ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளுக்கு, அந்த நாடுகளின் பொருளாதாரக் குழுவில், இந்தியா அறிவித்திருப்பதாக, நம்பத்தகுந்த வட்டாரச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளால் மீதப்படுத்தப்படும் வெளிநாட்டுச் செலவாணி நாணயங்களை, அமெரிக்க, ஐரோப்பிய பாங்கிகளில் சேமித்து வைத்திருப்பதைக் கைவிட்டு, உள்நாட்டு பாங்கிகளிலேயே வைத்திருக்க வேண்டுமெனவும், அதனுல் அந்த நாணயங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, அதனை உபயோகிக்க விரும்புகிற நாட்டுக்கு மொத்தமாக உதவுவது இலகுவாகும் எனவும், இந்தியா அறிவுறுத்தி இருக்கிறதாகவும் தெரியவருகிறது.

டெல்லிக்கு செல்கிறர்!

சென்னை நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர், பாலாறு தண்ணீர் பிரச்சினையில் சென்னைக்கும் மைசூருக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறு பற்றி, மத்திய நீர்ப்பாசன அமைச்சரையும், திட்டக் குழுவையும் நேரில் சந்தித்துப் பேசுவதற்கு டில்லிக்குச் செல்லக்கூடுமாம்!

ஆரம்பப் பள்ளிகளில் விவசாயப் பண்ணை!

அரசாங்க விருப்பம் குறித்து மந்திரி சுப்பிரமணியம்

கோவை, ஏப். 21—

"சென்னை மாநிலத்தில் இப்போதுள்ள ஆரம்பக் கல்வி முறையை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இப்போது ஒரு குழு இதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டு வருகிறது.

"ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு விவசாயப் பண்ணை இருக்க வேண்டும்; ஏனெனில், விவசாயிகளின் குழந்தைகள் விவசாயத்தில் அபிவிருத்தி அடைந்துள்ள முறைகள் பற்றித் தெரிந்துகொள்ள முடியும் என்றுசர்க்கார் விரும்புகிறது,"

என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், செட்டிப்பாளையம் கிராம மக்களிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பட்டம் தாணுவின் கொடுங்கோலுக்குப் பலியானோர்!

குடும்பங்களுக்கு உதவ காங்கிரஸ் அரசாங்கம் முடிவு

திருவனந்தபுரம், ஏப். 22—

சென்ற ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் திரு—தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்ற திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தின்போது போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக உயிர் துறந்த 4 பேர்களின் மனைவிமார்களுக்கு, சர்க்கார், நஷ்டயீட்டுத் தொகையாக தலா ரூ. 500 வீதம் கொடுக்க ஒப்புதல் அளித்திருப்பதாகத் தெரிகிறது.

பைங்குளம் பகுதியில் பீர் முகமது, குன்னத்தூர் பகுதியில் செல்லப்பன், நட்டாலம் பகுதியில் இராமலிங்கம், கல்வார் பகுதியில் பப்பு பணிக்கர் ஆகிய நால்வரும் மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியானவர்களாம்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாம்!

அமெரிக்க சரித்திரத்திலேயே முதன் முறையாக, இப்போது, அந்தந்த ஊர்களின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ள படை முழுவதையும் உடனடியாகத் திரட்டுமாறு பாதுகாப்பு இலாகா உத்தரவிட்டுள்ளதாம் இது, பரீட்சார்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்றும், பீதியடைவதற்குக் காரணமொன்றுமில்லையென்றும் அவர்கள் கூறியுள்ளனராம்!

சமாதான யுகம் தோன்றுமா?

"கூட்டுப் பாதுகாப்பு அமைத்தால்தான் சமாதானம் நிலவும்," என்று எத்தியோப்பிய வெளிநாட்டு மந்திரி ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில் கூறினர்.

ஆக்கிரமிப்பைத் தடுக்க கூட்டு முயற்சி செய்யப்படாததால்தான், எத்தியோப்பிய நாட்டுக்குத் தொல்லை விளைந்ததென்று அவர் சொன்னர்.

"எத்தியோப்பியா மீது பாசிசப் படையெடுப்பு ஏற்பட்டபோது அதைத் தடுப்பதற்கு சர்வதேச சங்கம் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை," என்று அவர் கூறினர்.

"பல நாடுகளும் சேர்ந்து, சொல்லாலும், செயலாலும், எல்லா மக்களுக்கும் பாதுகாப்பளித்தால் தான் உலகத்தில் சமாதான யுகம் தோன்ற முடியும்," என்று அவர் குறிப்பிட்டார்.

உரிமைக்காக எத்தியோப்பியா போராடிய வரலாற்றை அவர் எடுத்துரைத்து; 'எல்லாவிதமான காலனி ஆதிக்கமும் ஒழிக்கப்பட வேண்டும்,' என்று வற்புறுத்தினர்.

ஷோலாப்பூரில் நிலக்கரி தட்டுப்பாடு

155,00 தொழிலாளர் வேலை இழப்பர்?

ஷோலாப்பூர், ஏப். 20—

ஷோலாப்பூரில் நிலக்கரித் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் 5 நெசவாலைகளில் பணியாற்றும் 15,000 தொழிலாளர்களுக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு வேலை இருக்காது என்று அஞ்சப்படுகிறதாம்.

மாவட்ட அதிகாரி, தொழிலாளர் பிரதிநிதிகள், ஆலை நிர்வாகிகள் ஆகியோரடங்கிய குழு ஒன்று நிலக்கரி கட்டுப்பாடு அதிகாரிக்கு தந்தி மூலம் நிலையை விளக்கி, உடனடியாக ஆலைகளுக்கு நிலக்கரி தர ஏற்பாடு செய்யக் கோரியுள்ளனராம்.

ஆலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 2,000 டன் நிலக்கரி ஒதுக்கப்பட்டதாம். ஆனுல் கடந்த பிப்ரவரியில் 1,000 டன், மார்ச்சில் 1,300 டன், ஏப்ரலில் 600 டன் மட்டுமே தரப்பட்டதாம்.

குறைவாக நிலக்கரி தரப்பட்டதே நெருக்கடிக்குக் காரணமாம்.

வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டம்

இன்னும் இரண்டாண்டுகள் நீடிக்கும்

சென்னை, ஏப். 21—

சென்னை வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கப்படுமெனத் தெரிய வருகிறது.

இத்தகவலை வெளியிட்ட மந்திரி சேதுபதி, சில திருத்தங்களுடன் இந்த சட்டம் நீடிப்பதற்கான மசோதா, வரும் ஆகஸ்டு திங்களில் சட்ட சபை கூடும்போது கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்திருக்கிறர். இப்போதுள்ள குடியிருப்பு வசதிகளைப் பார்க்குமிடத்து வரும் செப்டம்பருக்குப் பின்னும் சட்டம் நீடிக்கப்பட வேண்டியது அவசியமெனத் தெரிவதாகவும் கூறியிருக்கிறர்.

இனி செல்லாது!

'பாங்க் ஆப் இந்தோ சீனு'வின் நாணயச் செலாவணி நோட்டுகள் 1955 மே 1-ந் தேதி முதல் புதுச்சேரியில் செல்லாதெனவும், அந்த நோட்டுகளை வைத்திருப்பவர்கள், மே 7-ந் தேதிக்குள், இந்திய இம்பீரியல் பாங்கியில் கொடுத்து மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும், குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் எக்காரணங் கொண்டும் அந்த நோட்டுகள் மாற்றிக் கொள்ளப்படமாட்டாவென்றும் புதுவை சர்க்கார் 'கெஜட்' குறிப்பொன்று கூறுகிறது.

கல்வி நிறுவனங்கள் - அறிவாலயங்கள்!

அடிப்படை இலட்சியங்கள் பற்றி இராசேந்திரர்

புதுடில்லி, ஏப். 21—

"எந்த ஒரு நாட்டிலும் கல்வி முறை எவ்வாறிருந்தாலும், கல்வி நிறுவனங்கள் அறிவாலயங்களாகக் கருதப்பட வேண்டும்; கல்வியின் அம்சங்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் இருப்பினும், கல்வியின் அடிப்படை இலட்சியமும், தத்துவமும் அனேகமாக ஒரேவகையாகத்தான் இருக்க முடியும்,"

என்று, டாக்டர் இராசேந்திர பிரசாத் கூறியிருக்கிறர்.

'ரஷ்யாவை அண்டியுள்ள நாடுகள் ரஷ்யக் காலனிகளே!'

பாண்டுங் மாநாட்டில் இலங்கைப் பிரதமர் குற்றச்சாட்டு

"காலனி ஆதிக்கத்திற்குப் பல தோற்றங்கள் உண்டு; கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவை அண்டியுள்ள நாடுகள் ரஷ்யாவின் காலனிகள் இல்லையா? நாடுகளின் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்ப்பதைப் போலவே, ரஷ்யாவின் காலனி ஆதிக்கத்தையும் பகிரங்கமாக எதிர்க்கவேண்டும்; நாம் காலனி ஆதிக்கத்தின் பல தோற்றங்களையும் எதிர்ப்பதாகவும், உலகில் உள்ள எல்லா காலனி ஆதிக்கங்களையும் ஒழித்துக் கட்டுவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கப் போவதாயும் அறிவித்துவிடவேண்டும்.

"ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா, செக்கோஸ்லோவேகியா, லாட்வியா, லிதுவேனியா, போலந்து முதலிய நாடுகள் ரஷ்யாவின் காலனிகளாகத்தானே இருக்கின்றன? இவற்றிற்கும், ஆசியா, ஆப்பிரிக்கா இங்கெல்லாம் உள்ள மற்ற காலனிகளுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? ஆகவே, நாம், மேற்கத்திய காலனி ஆதிக்கத்தை எதிர்ப்பதைப் போன்றே ரஷ்ய காலனி ஆதிக்கத்தையும் எதிர்க்க வேண்டும்,"

—என்று, இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை, ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டு அரசியல் குழுவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறர்

ரஷ்யா காலனி ஆதிக்கம் செலுத்துவதாக அவர் எழுப்பியுள்ள குற்றச்சாட்டிற்கு, சீனப் பிரதமர் சூ-என்-லாய் தாம் பதில் அளிக்கப் போவதாக கூறியிருக்கிறராம்.

நகாத சொல்லாடல்!

கராச்சி, ஏப். 21—

இனந் தெரியாத அநாமதேயப் பேர்வழிகள் பொது டெலிபோன் நிலையங்களிலிருந்து சொண்டு, பெண்களை டெலிபோனில் அழைத்து, அவர்களுடன் கண்டபடி பேசி, நகாத முறையில் சொல்லாடல் செய்வதாக தபால்-தந்தி இலாகா அதிகாரிகளுக்கும் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றனவாம்.

அருப்புக்கோட்டையில் ஒரு நூற்பு ஆலை

விருதுநகர், ஏப். 20—

அருப்புக்கோட்டையில் நூற்பு ஆலை ஒன்றை நிறுவுவதற்குச் சாத்தியமான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென அமைச்சர் பக்தவத்சலம் வாக்குறுதி அளித்துள்ளாராம். இது சம்பந்தமாகக் கூட்டுறவு ரெஜிஸ்திராரை அங்கு அனுப்பி வைக்கப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளாராம்.

24-4-55 மாலை 6-30 மணிக்கு - சென்னை தியாகராயர் கல்லூரி திறந்த வெளி அரங்கில்

எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினரின் புதிய தமிழ் நாடகம்

ஆசை நினைவு

எம்.ஜி.இராமச்சந்திரன், எம்.ஜி.சக்ரபாணி, ஜி.சகுந்தலா ஆகியோர் நடிப்பது

கட்டணம்: ரூ. 3, 2, 1, அணு 12

★ கலை விருந்து பெற, வாரீர்! ★ மாநில மாநாட்டுக்குக் காணிக்கை தர, வாரீர்!

ரூ. 50 கோடி மின்சார தொழிற்சாலையை சென்னையில் நிறுவக் கோரிக்கை

திட்டக் குழுவிடம் சென்னை அரசியலார் வற்புறுத்தல்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் ரூ. 50 கோடி செலவில் கனரக மின்சாரத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளனர்; இந்தத் தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் அமைக்குமாறு திட்டக் குழுவிற்கு சென்னை சர்க்கார் அனுப்பியிருக்கும் கடிதத்தில் வற்புறுத்தியுள்ளனராம்.

இந்தியாவில் மிகப்பெரிய அளவில் அமைய இருக்கும் இந்தத் தொழிற்சாலையில் ஸ்விட்சு-கியர்கள், டர்பைன்கள், டிரான்ஸ்பார்மர்கள், மற்றும் இதர மின்சாரக் கருவிகள் தயார் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. இச்சாமான்கள் இப்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

கனரக மின்சாரத் தொழிற்சாலையை அமைப்பதற்கு சென்னை மிகவும் தகுதியான இடம் என்று வற்புறுத்தப்பட்டதுடன், கிராமங்களுக்குத் தரும் அளவில் ஏராளமான மின்சார வசதி சென்னையில் கிடைக்குமென்றும், சென்னை மாநிலத்திலுள்ள முதல்தர, இரண்டாந்தர தொழிற் பள்ளிகளில் மின்சாரப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குரிய பயிற்சிகளுக்கு தொழிலாளர்களைப் பயிற்றுவிக்க முடியும் என்றும், சென்னை சர்க்கார், திட்டக் குழுவிற்கு எடுத்துக்காட்டியிருக்கின்றனராம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் பங்கு என்னவென்பதை இப்போது சர்க்கார் நிர்ணயித்து வருகிறார்களாம். ரூ. 4,000 கோடியில் இந்திய சர்க்கார் தயார் செய்யும் இத்திட்டத்தில், சென்னைக்கு ரூ 200 கோடி ஒதுக்கப்படும் என்று தெரிகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை சர்க்கார், மின்சார உற்பத்திக்கென மட்டும் ரூ. 60 கோடி செலவிடத் திட்டமிடுகிறார்களாம். இதன் மூலம் இங்கே மின்சார உற்பத்தி இரட்டிப்பாகி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 6 மில்லியன் கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகுமாம்.

நீர்ப் பாசனத் திட்டங்களுக்கென ரூ. 25 கோடி செலவிடப்படுமாம்.

சென்னையில் எஃகுத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவது நெய்வேலி நிலக்கரித் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்தே இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

ரூ. 60 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கும் நெய்வேலி தொழில்கள், சென்னைக்கு மறைமுகமாகப் பல உப தொழில்களை அமைக்க உதவுவதுடன், இத்திட்டத்தில் கிடைக்கும் இலாபத்தில் நான்கில் ஒரு பங்கு சென்னைக்குக் கிடைக்குமென்றும் தெரிகிறது.

அடுத்த திங்கள் இறுதியில் டில்லியில் நடைபெற இருக்கும் தேசிய அபிவிருத்திக் குழுவில் சென்னை நிதி அமைச்சர் உள்பட அபிவிருத்தி அதிகாரி, நிதி இலாகா செயலாளர் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிகிறது.

பாண்டுங் மாநாட்டில்.....!

★

பண்டிதர் பேசினர்!

"உலகில் யுத்த அபாயம் பலமாக ஏற்பட்டிருக்கிறது; இந்த நேரத்தில், ஆசிய - ஆப்பிரிக்க மக்கள் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு தங்களின் முழு ஆதரவையும் தர வேண்டும்; இந்நாடுகள் இராணுவக் கூட்டுச் சேருவது கண்டனத்திற்குரியது.

"குறைந்தபட்சம் சமாதானம் பற்றிய பர்மாவின் பிரரேபணையை ஒப்புக்கொள்ளாவிட்டால், 'யுத்தத்தின் மூலமாகத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை,' என்பதை ஏற்றுக்கொள்வதுபோலாகும்!

"வல்லரசுகளின் எந்தக் கோஷ்டிக்கும் ஆசிய - ஆப்பிரிக்க நாடுகள் வால் பிடித்துக்கொண்டு செல்வது என்பது மிக அவமரியாதையான செயலாகும்.

"அல்ஜீரியா, மொராக்கோ, டுனீஷியா ஆகிய நாடுகளுக்கு சுதந்திரம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், பெரிய வல்லரசுகளின் 'பக்கபலம்'தான்.

"அட்லாண்டிக் ஒப்பந்தமே (நேட்டோ) காலனி ஆதிக்கத்திற்கு பலமான ஊக்கம் அளிக்கிறது. கோவா பிரச்சினையில், அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் இந்தியாவைப் பற்றிப் பேசுவது அசம்பாவிதமாகும்; அட்லாண்டிக் ஒப்பந்தம் ஏற்படாவிடின், இதற்குள் வட ஆப்பிரிக்கா சுதந்திரமடைந்திருக்கக்கூடும்."

மாநாட்டு அரசியல் குழுவில் பர்மா கொண்டு வந்துள்ள பிரரேபணை கூறுவதாவது:—

"இந்த மாநாட்டில் கூடியிருக்கும் நாடுகள், ஒருவர் தேசிய சுதந்திரத்தை மற்றவர் மதித்து நடந்து கொள்வதாயும், அதைப் போலவே மற்ற நாடுகளுடனும் தொடர்பு வைத்துக் கொள்வதாயும் அறிவித்துவிட வேண்டும்.

"அவர்கள், ஒருவர் உள்நாட்டு விஷயத்தில் மற்றவர் தலையிடுவதில்லை என்றும், எல்லா நாடுகளும் சிறியவை—பெரியவை என்ற வேறுபாடு இன்றி சமம் என்றும், எல்லா இன மக்களும் ஒன்று என்றும் ஒப்புக்கொள்வதாக இந்த நாடுகள் அறிவித்துவிட வேண்டும்.

"ஜீவாதார மனித உரிமைகளையும், ஐ. நா. கொள்கைகளையும் ஒப்புக்கொள்வதாகவும் அறிவிக்க வேண்டும்.

தகராறுகள்

மேற்கத்திய நாடுகளைப் போலவே ரஷ்யாவும் தன்னை அண்டியுள்ள நாடுகளை 'காலனி'களாக்கி ஆதிக்கம் செலுத்துகிறது என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை கொண்டுவந்த பிரரேபணையை அவர் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் இதே பிரரேபணையை பாகிஸ்தான், துருக்கி போன்ற மேற்கத்தி சார்பு நாடுகள் திரும்பவும் கொண்டுவந்து வலியுறுத்தி யிருக்கின்றன; ஆனால், அவர்களுடைய பிரரேபணை கம்யூனிச எதிர்ப்பு அடிப்படையில அமைந்ததெனவும், நிகழ்ச்சி நிரலில் விவாதத்திற்கென இடம் பெறாத ஒன்றெனவும் கூறப்பட்டிருக்கிறது.

'புதிய (ரஷிய) காலனி முறை' பற்றி விவாதிக்கக் கூடாதெனவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியா, சீனா, எகிப்து, இலங்கை, பாகிஸ்தான், பர்மா, பிலிப்பைன், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகள் கொண்ட ஒரு உப குழு, காலனி ஆதிக்கம் பற்றி சர்ச்சைக்கிடமில்லாத வகையில் தீர்மானம் ஒன்றை உருவாக்க

கழகக் கூட்டங்கள்

★

பழைய ஆயக்குடி

26—4—55 மாலை, அழகிரி திடலில் (கறிக்கடை திடல்) தோழர் சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், பொன்னுசாமி, ப. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

★

இராமாபுரம்

26—4—55 அன்று, தோழர் சி. கண்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மணிஎழிலன், ப. இளங்கோ ஆகியோர் பேசுவர்.

குறள் வகுப்பு

24—4—55 காலை 9 மணிக்கு, திருச்சி, எண் 1, பெரிய செட்டித் தெரு, பாண்டியன் படிப்பகத்தில், திரு. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

பாராட்டுக் கூட்டம்

"25—4—55 மாலை 6 மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி, கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளராக தோழர் இளம்பரிதி தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு, தேனீர் விருந்தும், பாராட்டுதலும் நடைபெறும்." என்று, படிப்பகச் செயலாளர் சண்பகவேல் அறிவிக்கிறார்.

காதணி விழா

25—4—55 காலை 9 மணிக்கு, சென்னை, புரசை, வேளாளர் தெரு, 100-வது எண்ணுள்ள இல்லத்தில், தோழர் ஆர். சாமிநாதன் குமாரி ராணி செந்தாமரைக்கு காதணி விழா நடைபெறும்.

கல்விச் சட்ட எதிர்ப்பு நீடிக்கிறது

மாணவர் மீது போலீஸ் தடியடி

தென்னாப்பிரிக்க வெள்ளையருக்கும் - கருப்பர்களுக்கும் இடையில் கல்வி பயிலுவதில் வேறுபாடு காட்டும் புது 'பாண்டு கல்விச் சட்டத்'தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த ஆப்பிரிக்கர் மீது போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்ததாம்.

சுமார் 10,000 மாணவர்கள் கடந்த 10 நாட்களாக பாண்டு கல்விச் சட்டத்தை எதிர்த்து, பள்ளிகளைப் புறக்கணித்து வருகின்றனராம்.

பல கிளர்ச்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் 'டச்சு சர்ச் மிஷன்' பள்ளி ஒன்றிற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்துவிட்டனர் என்றும் தெரிய வருகிறது.

சியமிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதற்கு முன் 'காலனி ஆதிக்கம்—புதியதும் - பழையதும்' என்ற தலைப்பில் விவாதிப்பதை சூ-யென்-லாய் எதிர்த்தார்; மேலும் தத்துவ சம்பந்தமான தர்க்கம்புரிய மாநாட்டிற்கு வெளியே தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

பண்டித நேரு இதுபற்றி பேசுகையில், ரஷ்யாவை அண்டியுள்ள நாடுகளைப் பூரண சுதந்திர நாடுகளாக பல ஆசிய — ஆப்பிரிக்க நாடுகளும், ஐ. நா. சபையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன; அப்படி இருக்கும்போது, அவை 'காலனி' நாடுகள் என்று கூறுவது சரியாகாது; நாம் ஏற்கனவே உள்ள தகராறுகளைக் குறைக்க விரும்பும்போது, தகராறுகளை அதிகரிக்கும் வகையில் காரியம் செய்யக் கூடாதெனக் கோரியிருக்கிறார்.

இலங்கைப் பிரதமரின் குற்றச்சாட்டு 3-ம் பக்கத்தில் காணப்படுகிறது.

மக்கள் சபையில்

★

ரூ. 115 லட்சம் நஷ்டம்

இந்திய விமான கார்ப்பரேஷன் கடந்த 1954—55-ம் ஆண்டில் மொத்தமாக ரூ. 115.59 லட்சம் நஷ்டமடைந்தது என்றும், அந்த ஆண்டில் மொத்த வருமானம் ரூ. 680 60 லட்சம் என்றும் அறிவிக்கப்பட்டது.

மரண தண்டனை!

இந்தியா 'சுதந்திரம்' பெற்றபின், கொலையுடன் கூடிய கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக நாடு முழுவதிலுமாக மொத்தம் 3,009 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உருவச் சிலைகள்!

பொது இடங்களிலிருக்கும் அந்நிய நாட்டு மன்னர்கள், கவர்னர்கள், வைசிராய்கள் ஆகியோரின் உருவச் சிலைகள் பிரச்சினையில் என்ன செய்வதென்பது பற்றி இதுவரையிலும் யாதொரு முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், இதுபற்றி மாநில சர்க்கார்களின் கருத்தையும் அறிந்து கொண்டு ஆவன செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

வாங்கவில்லையே!

அணு ஆயுதங்களை எதிர்த்து அவற்றைச் சமாளிப்பதற்கான எந்தக் கருவியையும் சர்க்கார் வாங்கவில்லை என்றும், பாதுகாப்புப் பிரச்சினை பற்றிய ஆராயவில்லை என்றும் கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் கட்ஜு குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுக் கப்பல்கள்!

சென்ற ஆண்டில், பிரிட்டன், அமெரிக்கா, யூகோஸ்லேவியா, எகிப்து, சுவீடன், ஹாலந்து சிலோன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கடற்படைக் கப்பல்கள் இந்தியாவிற்கு வந்தன என்று தகவல் தரப்பட்டுள்ளது.

இந்தியாவில் அந்நியர்கள்

சென்ற 1953-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ந் தேதியோடு, இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ள அந்நியர்கள் தொகை 42,591 என்று தெரிகிறது.

சீனர்கள்: 9,110; ஆப்கானியர்: 5454; அமெரிக்கர்: 3157; இரானியர்: 3956; ஜெர்மனியர்: 1191; பிரெஞ்சுக்காரர்கள்: 959; பர்மியர்: 636; பெல்ஜியர்: 626; டச்சு: 434; இத்தாலியர்: 825; ஈராக்: 705; ஜப்பானியர்: 235; திபெத்: 5030; எல்லைப்புறப் பட்டாணியர்: 6,357; போர்த்துக்கீசியர்: 20,600; ரஷியர்: 249; சுவிஸ்: 572; ஸ்பானிஷ்: 413.

வருந்துகிறோம்

தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் மாமியார் திருமதி செங்கம்மாள் 17—4—55 பகல் 1½ மணிக்கு உயிர் நீத்தார். மறுநாள் வரையிலும் தோழர் சிற்றரசுவின் வருகைக்காகக் காத்திருந்து, அவர் வராததால் மறுநாள் அடக்கம் செய்யப்பட்டது. 17—4—55ல், தோழர் சிற்றரசு நாஞ்சில் மாவட்டத் தேர்தலை நடத்திக்கொண்டிருந்ததால் வர இயலாமைக்கு வருத்தந் தெரிவித்து பதில் தந்தி அனுப்பிவிட்டார்.

அம்மையாரின் பிரிவுக்கு வருந்தும் அன்னாரின் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். (ஆ-ர்.)

டமாஸ்கஸ், ஏப் 22—

சிரியாவின் உதவி இராணுவத் தலைவரும், சமீபத்தில் ஏற்பட்ட இராணுவப் புரட்சியில் முக்கிய பங்கேற்றவருமான கர்னல் அட்மான் மால்கி இன்று பிற்பகலில் ஒரு கால்பந்து விளையாட்டுப் போட்டி நடந்துகொண்டிருந்த போது ஒரு சார்ஜண்டால் சுட்டுக் கொல்லப்பட்டாராம்.

நாணய முறை மாறுகிறது

ரூபாய்க்கு 10 அணா முறை அமுலாகும்!

புதுடில்லி, ஏப். 22—

நாணயங்களுக்கு தசாம்ச முறையையும், நிறுத்தல், முகத்தல் அளவைகளுக்கு மீட்டர் முறையும் கையாள வேண்டும் என்று திட்டக் குழு முடிவு செய்திருக்கிறது.

தசாம்ச நாணய முறைக்கான மசோதாவை நிதிஇலாகா சீக்கிரமே கொண்டுவரும்.

அளவைகள் பற்றி புதுமுறை வருவதற்குமுன் நாணய தசாம்ச முறை கொண்டுவரப்படும்.

அளவைகளை ஒருசீரப்படுத்த உதவி வர்த்தக மந்திரி கனுங்கோ தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகவலை மத்திய வர்த்தக தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

திவிதீதி கேசவ அய்யங்கார், பி. டி. தாணு பிள்ளை, சர்மா ஆகியோர், "மீட்டர் முறையில் நிறுத்தல் — முகத்தல் அளவைகளை நாடெங்கும் அமுலுக்குக் கொண்டுவர சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்," என்று கொண்டுவந்த தனிப்பட்ட தீர்மானத்தை மக்கள் சபை ஏற்றுக்கொண்டது.

அந்தத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும்போதுதான் திரு. டி. டி. கே. மேற்கண்ட விபரங்களைக் கூறினார்.

பண்டித நேருவின் ரஷ்ய சுற்றுப் பயணம்

பண்டித நேரு, தனது ரஷ்ய சுற்றுப் பயணத்தை வரும் ஜூன் திங்கள் 4-ம் நாள் துவக்குவார் எனத் தெரிகிறது.

15 நாட்கள் ரஷ்யாவில் சுற்றிப் பார்த்துவிட்டு, யூகோஸ்லேவியாவிற்குச் சென்று அங்கு 5 நாட்கள் தங்குவார் என்றும், போலந்து நாட்டிற்கும் அவர் செல்லக்கூடும் என்றும் அறியப்படுகிறது.

வியன்னாவில், அவர், ஐரோப்பிய நாடுகளில் இந்தியத் தூதவர்களாயிருப்போரின் மாநாடு ஒன்றில் பேசுவாராம்.

ராஜ்கோட்டில் தீ விபத்து

15 மைல் சுற்றளவில், புல் பூண்டுகள் கருகின!

பலித்தானா ஜெம் பகுதியில் பெரும் தீ விபத்து ஒன்று ஏற்பட்டு, 15 மைல் சுற்று வட்டாரத்திலுள்ள புல் பூண்டுகளெல்லாம் கருகிவிட்டதாக தகவல் கிடைத்திருக்கிறது.

இத் தீ மூன்று தினங்கள் எரிந்ததாகவும் சொல்லப்படுகிறது.

அன்பளிப்பு

6—4—55 ல், சென்னை திருவல்லிக்கேணியில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற தோழர் தாமோதரன்—தோழியர் மோகனா திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 10 நன்கொடை தரப்பட்டது — பெற்றுக் கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

நெல்லை மாவட்டம் கோவில் பட்டி பாண்டியனார் படிப்பகத்தின் சார்பாக 10—4—55ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு தோழர் ஏ. வெ. கி. சம்பத் அவர்களிடம் தரப்பட்ட 101 காலணாக்கள் (ரூ. 1—9—0) வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.